# தேசிய புலமைச் சொத்து நிதியம் - 2011

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களினால் நிதிக்கூற்றுக்களில் எற்படக்கூடிய தாக்கங்களைத் தவிர 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு தேசிய புலமைச் சொத்துக்கள் நிதியத்தின் நிதி நிலைமையும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றலையும் காசோட்டத்தையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு அமைய உண்மையாகவும் நியாயமாக நிலைமையை வழங்குகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

பின்வரும் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) திறைசேரி பிணைமுறிகளில் செய்த முதலீட்டின் கிரயத்தை கணக்கிடும் போது கொள்வனவிற்காக செலவிடப்பட்ட பெறுமதியில் அட்டுறு வட்டியின் பெறுமதி கழித்து கணக்கிடுவதற்குப் பதிலாக அட்டுறு வட்டி உள்ளடக்கி முதலீட்டினைக் கொள்வனவு செய்வதற்கு செலவிடப்பட்ட முழுத்தொகையையும் முதலீடுகளின் கிரயமாகக் கருதி கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. அவ்வாறே திறைசேரி பிணைமுறி முதலீட்டின் கிரயத்தின் அடிப்படையில் கணக்கு வைக்கப்பட வேண்டிய போதிலும், மேலே காட்டப்பட்ட கணிப்பிடப்பட்ட கிரயப் பெறுமதி மற்றும் முகப்புப் பெறுமதி இரண்டிலும் குறைந்த பெறுமதி அடிப்படையில் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) திறைசேரி முதலீடுகளின் வட்டி வருமானம் முதலீட்டு வட்டி விகிதத்தின் கீழ் கணக்கிட வேண்டிய போதிலும், கூப்பன் வட்டி வீதத்தில் கணிப்பிடப்பட்டு கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

(இ) வியாபாரக் குறி, ஆக்கஉரிமை மற்றும் கைத்தொழில் திட்டங்களை பதிவு செய்தல் என்பவற்றிற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்கும் போது அறவிடப்படுவதுடன் அத்தொகையை உரிய ஆண்டின்

வருமானமாக கணக்கிற்கு கொண்டுவரப்படும் எனினும், குறித்த அனுமதிப்பத்திரத்தை விநியோகித்தல் செயற்பாட்டை நிறைவேற்றும் நடவடிக்கை வருடக் கணக்காக முன்கொண்டு வரப்படுவதால் அதற்கான செலவுகள் அந்தந்த ஆண்டுகளின் செலவினமாக கணக்கு வைக்கப்படும். இதன் பிரகாரம் விண்ணப்பத்துடன் கிடைத்த பணத்தை எதிர்வரும் காலத்திற்காக கிடைத்த வருமானமாக கணக்கீடு செய்து அந்தந்த ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட செயற்பாடுகளின் பிரகாரம் உரிய வருமானத்தை இனங்கண்டு சீராக்கம் செய்யாமையால் வருமானம் கூடுதலாகவும் நடைமுறைப் பொறுப்புக்கள் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தன.

(ஈ) கைத்தொழில் திட்டம் மற்றும் வியாபாரக் குறிகளைப் பதிவுசெய்தல், மாற்றம் செய்தல் உட்பட விடயங்களை வர்த்தமானியில் வெளியீடு செய்வதற்காக வாடிக்கையாளர்களிடமிருந்து அறவிடப்படுகின்ற பணத்தை அச்சந்தர்ப்பத்திலேயே நிதியத்தின் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்ட போதிலும், அவ்வருமானத்திற்குரித்தாக செலவிடப்பட வேண்டிய எனினும் ஆண்டின் இறுதில் செலவிடப்படாதிருந்த அச்சீட்டு செலவினம் உட்பட ஏனைய செலவினங்களை இனங்கண்டு கணக்கீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் போன்றவற்றிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | |
| (i) நி.பி 133 மற்றும் 134(3) உப பிரிவு | உள்ளகக் கணக்காய்வொன்றைச் மேற்கொண்டு உள்ளகக் கணக்காய்வு அறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய |

போதிலும், நிதியம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) நி.பி 880

அரசின் நிதி, வருமானம், முத்திரை அல்லது பொருட்கள் என்பவற்றிற்குப் பொறுப்பாக உள்ள உத்தியோகத்தர்கள் 612 ஆம் அத்தியாயத்தின் கீழ் பிணை வைக்க வேண்டிய போதிலும், அவ்வாறு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/ 423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை.

(i) 3.2.(ஆ) ஆம் பந்தி

கொடுப்பனவு செய்வதற்குள்ள பணம் மற்றும் ஏனைய பொறுப்புக்கள் தீர்வு செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய தொகை தாமதமின்றி திரட்டு நிதியத்திற்கு மாற்றல் மற்றும் மிகை நிதி வெளி நிறுவனங்களில் முதலீடு செய்யப்பட்டிருக்கும் போது அவை முதிர்ச்சியடைந்தவுடன் திரட்டிய நிதிக்கு மாற்றப்பட வேண்டிய போதிலும், நிதியம் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ii) 4.1(அ) ஆம் பந்தி

நிதியத்தின் நோக்கத்திற்கு இணங்க தயாரிக்கப்பட்ட வருடாந்த வரவு செலவுத் திட்டம் அதன் கட்டுப்பாட்டு அத்தியட்சகர் மற்றும் அமைச்சு செயலாளரால் அதற்கு முன்னைய ஆண்டின் செப்தம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் தேசிய பாதீட்டுப் பணிப்பாளர் நாயகத்திற்கும் அரச நிதிப் பணிப்பாளர் நாயகத்திற்கும் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) 4.1(இ) ஆம் பந்தி

அங்கீகரிக்கப்பட்ட முறையான வரவு செலவுத் திட்டமொன்று இல்லாமல் மீளாய்வாண்டின் போது நிதியத்திலிருந்து

| | |
|---|---|
| | ரூபா 27,440,396 தொகையான செலவினமொன்று மேற் கொள்ளப்பட்டிருந்தது. |
| (iv) 4.4 ஆம் பந்தி | ஒவ்வொரு ஆண்டிற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அவர்களின் அறிக்கை மற்றும் நிதியத்தின் வருடாந்த நிதிக்கூற்றுக்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் போது நிதியத்தின் செயற்பாட்டு நடவடிக்கைகளின் விளைவுகள் ரூபா 43,026,745 ஆன மிகையாக இருந்ததுடன், இதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 31,514,252 உடன் ஒப்பிடுகையில் நிதி விளைவுகளில் ரூபா 11,512,493 அதிகரிப்பொன்று இருந்தது. வியாபாரக் குறி வருமானம் ரூபா 3,138,499 ஆல் அதிகரித்தமை, முதலீட்டு வட்டி வருமானம் ரூபா 4,029,791 ஆல் அதிகரித்தமை, முதலீடு செய்வதிலான நட்டம் ரூபா 6,246,583 ஆல் குறைவடைந்தமையும் வீட்டு வாடகை மற்றும் முத்திரைக் கட்டண செலவினம் என்பன முறையே ரூபா 1,260,000 ஆலும் ரூபா 1,010,271 ஆலும் அதிகரித்தமை நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

**வியாரக்குறி, பதிப்புரிமை மற்றும் கைத்தொழில் திட்டங்களைப் பதிவு செய்தல்**

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஐந்தாண்டுகளுக்குரிய வியாபாரக்குறி, பதிப்புரிமை மற்றும் கைத்தொழில் திட்டங்களைப் பதிவு செய்தல் தொடர்பான செயலாற்றுகை கீழே புள்ளிவிபர குறிப்பில் காட்டபட்டுள்ளது.

| செயற்பாடு | ஆண்டு | கிடைத்த விண்ணப்பங் களின் எண்ணிக்கை | பதிவுசெய்த எண்ணிக்கை | மீளாய்வாண்டின் இறுதியில் பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்களின் எண்ணிக்கை | பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் தொடர்பாக பணிப்பாளர் நாயகத்தின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) வியாரக்குறி பதிவு செய்தல் | 2006 | 7,213 | 1,098 | 29,107 | செயற்பாடு அமுல்படுத்தப்பட நீண்டகாலம் தேவைப்பட்டது. |
| | 2007 | 6,417 | 711 | | |
| | 2008 | 5,907 | 1,908 | | |
| | 2009 | 4,862 | 2,718 | | |
| | 2010 | 6,244 | 1,379 | | |
| | 2011 | 7,657 | 1379 | | |
| | | 38,300 | 9,193 | | |
| (ஆ) ஆக்கஉரிமை களை பதிவு செய்தல் | 2006 | 422 | 150 | 1,031 | விண்ணப்பதாரிகளால் பின்னர் மேற்கொள்ளப்படும் திருத்தங்கள் |
| | 2007 | 428 | 91 | | |
| | 2008 | 450 | 159 | | |
| | 2009 | 384 | 366 | | |
| | 2010 | 460 | 504 | | |
| | 2011 | 429 | 272 | | |
| | | 2,573 | 1,542 | | |
| (இ) கைத்தொழில் திட்டங்களைப் பதிவு செய்தல | 2006 | 493 | 450 | 1,037 | செயற்பாட்டு நடைமுறைகளுக்கு இணங்காத வகையிலும் குறைபாடுகளுடன் விண்ணப்பங்களைச் சமர்ப்பித்தமை |
| | 2007 | 302 | 12 | | |
| | 2008 | 389 | 89 | | |
| | 2009 | 306 | 260 | | |
| | 2010 | 285 | 261 | | |
| | 2011 | 443 | 109 | | |
| | | 2,218 | 1,181 | | |

மேற்படி தகவல்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிலும் கடந்த ஐந்தாண்டுகளிலும் வியாபாரக்குறிகளைப் பதிவுசெய்வதற்காக 38,300 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும், ஆறு ஆண்டுகளிலும் பூர்த்தி செய்யப்பட்ட எண்ணிக்கை 9,193 ஆகும். அதன் கடந்த - 6 ஆண்டுகளிலும் சமர்ப்பிக்கப்பட்ட முழு விண்ணப்பங்களிலும் பூர்த்தி செய்யப்பட்ட அளவு 24% சதவீதமாகும். அவ்வாறே மீளாய்வாண்டிலும் முன்னைய ஐந்தாண்டுகளிலும் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் விண்ணப்பபடிவங்களை நிராகரித்தல், விட்டுவிடல் மற்றும் விண்ணப்பங்களை மீளப்பெற்றுக்கொள்ளல் தொடர்பான புள்ளிவிபரத் தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. எவ்வாறாயினும் இது தொடர்பாக நிதியத்தின் செயலாற்றல் போதியளவில் நிறைவேற்றப்படாதிருந்ததாக அவதானிக்கப்பட்டது.

(ஆ) வியாபாரக்குறிகளைப் பதிவுசெய்வதற்காக மீளாய்வாண்டில் 7,657 விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றிருந்த போதிலும், 1,379 மட்டுமே பதிவுசெய்யப்பட்டிருந்தது. அதாவது கிடைத்த விண்ணப்பங்களில் 18% ஆக இருந்தது. முன்னைய ஆண்டிலும் 1,379 பதிவு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டில் அதிகரிப்பொன்று காணப்படவில்லை.

(இ) 2010 ஆம் ஆண்டின் போது பதிவுசெய்யப்பட்ட பதிப்புரிமைகளின் எண்ணிக்கை 504 ஆக இருந்ததுடன், 2011 ஆம் ஆண்டின் போது அது 272 ஆக இருந்தது. அதன்பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 46% ஆல் குறைவடைந்திருந்தது.

(ஈ) 2010 ஆம் ஆண்டின் போது பதிவுசெய்யப்பட்ட கைத்தொழில் திட்டங்களின் எண்ணிக்கை 261 ஆக இருந்ததுடன், 2011 ஆம் ஆண்டின் போது அது 109 ஆக இருந்தது. அதன்பிரகாரம் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 58% ஆல் குறைவடைந்திருந்தது.

## 3.2 பாதுகாப்பு காப்பகமொன்றையும் விற்பனை மேம்பாட்டு நிலையமொன்றையும் அமைத்தல்

தேசிய புலமைச் சொத்து அலுவலகத்திற்காக பாதுகாப்பு காப்பகமொன்றையும் விற்பனை மேம்பாட்டு நிலையமொன்றையும் நிர்மாணிப்பதற்காகவும் ஏனைய நடவடிக்கை களுக்காகவும் 2008 மற்றும் 2009 ஆம் ஆண்டுகளின் போது ரூபா 22,978,101 தொகை செலவினமொன்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) நிர்மாாணத்திற்குரிய காணியை சுவீகரிக்காமலும் சாத்தியவள ஆய்வொன்றை மேற்கொள்ளாமலும் நிர்மாண நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருந்தன.

(ஆ) மாநகர சபையினதும் நகர அபிவிருத்தி அதிகாரசபையினதும் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள தவறியமையால் மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா 9,522,500 ஆல் அதிகரித்திருந்தது.

(இ) நிர்மாண நடவடிக்கைகள் 2008 திசெம்பர் மாதத்தில் ஆரம்பிக்கப்பட்டு இடைநடுவில் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததுடன், இரண்டரை ஆண்டு காலப் பகுதியில் பாதுகாப்பற்ற வகையிலும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமலும் காணப்பட்டது.

(ஈ) கட்டிட நிர்மாணத்திற்காக ஒப்பந்தக்காரருக்கு முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த ரூபா 8,701,032 தொகைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட உத்தரவாதச்சான்றிதழ் 2008 திசெம்பர் 19 ஆம் திகதி முடிவடைந்திருந்த போதிலும், அவ் உத்தரவாதச் சான்றிதழை நீடிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அத்துடன், மேலும் அறவிடுவதற்கு இருந்த ரூபா 4,549,750 ஆன முற்பணத்தை மீள அறவிடுவதில் இடரொன்றும் காணப்பட்டது. மேலும் இத்தொகையை மீளஅறவிடுவதிலுள்ள தாமதத்தின் காரணமாக நிதியத்திற்கு ரூபா மூன்று இலட்சத்திற்கு அண்மித்ததாக பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்த வட்டி வருமானமொன்று கிடைக்காமல் போயிருந்தது.

(உ) ஒப்பநதக் கம்பனியுடன் மேற்கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2008 திசெம்பர் 18 ஆம் திகதி வரையில் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும், அத்தினத்தில் நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு ஒப்பந்தகாரர் தவறியிருந்தார்

(ஊ) கட்டிட நிர்மாணத்திற்குரிய இறுதி கொடுப்பனவு அறிக்கையில் பிழைகளுடன் கூடிய நிலைமையொன்று காணப்பட்டதுடன், மதியுரை சேவையை வழங்கிய ஒப்பந்தக் கம்பனியின் பொறுப்பினை நிறைவேற்றியிருக்கவில்லை.

## 4. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது பணிப்பாளர் நாயகத்திற்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பாக விசேட கவனம் தேவைப்படுகின்றது.

(அ) மனித வளமுகாமை

(ஆ) உள்ளகக் கணக்காய்வு